பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை 5

ஆசிரியர் அறிமுகம் 13

அவையில் முன்வைக்கப்பட்ட கேள்வி 25

1 பேருரை 27

2 எதற்கு முதலிடம்? எதைக் கொண்டு சீர்திருத்தம்? அது ஏன்? 28

3 நபிமார்கள் செய்த அழைப்புப்பணி எப்படிப்பட்டது? 30

4 அந்தக் கால அறபிகளும் இந்தக் கால முஸ்லிம்களும் 33

5 எது முஸ்லிம்களைப் பாதுகாக்கும்? 38

6 அறிவது ஒன்றே ஈமான் ஆகிவிடுமா? 40

7 கலிமாவின் அர்த்தம் விசாலமானது 43

8 அழைப்புப் பணியில் அயராத உழைப்புத் தேவை 52

9 நாம் செய்யவேண்டியது தஸ்ஃபியா, தர்பியா 55

10 அரசியலில் யார் இறங்கலாம்? எப்போது? 59

11 அவரவரின் சக்திக்கேற்ப... 62

12 நமது பிரச்சினைகளின் வேர் எங்கே? 64

13 அல்லாஹ்வின் சட்டங்களை நிலைநாட்டுதல் என்றால் 66

முதலில் தவ்ஹீது: பின்குறிப்புகள் 69

1 தவ்ஹீது ஒரு விளக்கம் 71

2 தஅவா ஒரு விளக்கம் 73

3 சீர்திருத்தப் பணிக்கு நபிமார்கள் காட்டிச் சென்ற வழிமுறை 81

4 தப்லீக் ஜமாஅத் அடிப்படைக் கொள்கையும் செயல்பாடுகளும் 88

- சூஃபீக் கொள்கையின் சுஃப்ர் 90
- தப்லீக்கில் சூஃபீக் கொள்கைவாதிகள் 96

- அல்லாஹ்வின் ஒளி கழிப்பிடத்திலா? 97
- சூஃபீக் கொள்கையின்பால் அழைக்க விரும்பிய ஷைகுல் ஹதீஸ் 98
- பெரியார்களைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுதல் 103
- கலிமா ஷஹாதத்துக்குத் தவறான அர்த்தம் 104
- நபிவழியைப் புறக்கணித்து கண்மூடித்தனமாக அமல் செய்தல் 105
- தஃலீம் தொகுப்பின் ஆதாரத்தன்மை? 106

5 கலிமா ஷஹாதத்தின் பொருளும் நிபந்தனைகளும் 111

6 மார்க்கத்தை நிலைநாட்டுங்கள், பிரிந்துவிடாதீர்கள் என்றால் என்ன பொருள்? 125

7 நடப்பு நிலவரம் அறிந்து இஸ்லாமைப் பரப்புங்கள் 129

8 தஸ்ஃபியா, தர்பியா செய்யாமல் கிலாஃபத்தா? 132

9 இஹ்வானுல் முஸ்லிமீன் பிரச்சினை 134

2

எதற்கு முதலிடம்? எதைக் கொண்டு சீர்திருத்தம்? அது ஏன்?

❀

முதலில் தவ்ஹீது பக்கம் முழு கவனத்தையும் திருப்புங்கள்.[3] அடுத்து, முஸ்லிம்களின் மோசமான நிலைமைபற்றிய விசயத்திற்கு வருகிறேன். இது ஒன்றும்அறியாமைக் காலத்தில் நம்முடைய நபி முஹம்மது ﷺ அனுப்பப்பட்ட நேரத்தில் அறபுகள் இருந்த நிலையைவிட மோசமானதல்ல.

கவனியுங்கள்: இஸ்லாமியத் தூதுச்செய்தி (குர்ஆனும் நபிவழியும் சொல்கிற செய்தி) இன்றும் நம்மிடம் இருக்கிறது. அதுவும், முழுமையாக இருக்கிறது. இது தவிர, சத்தியத்தை எடுத்துச் சொல்லி, அதன்படி செயல்படவும் செய்து,

- சரியான இஸ்லாமியக் கொள்கை (அகீதா),
- சரியான வணக்க வழிபாடு (இபாதத்),
- சரியான நடத்தை (சுலூக்),
- சரியான வழிமுறை (மன்ஹஜ்)

இவற்றின் பக்கம் மக்களை அழைப்பவர்களும் இருக்கவே செய்கிறார்கள். ஆனாலும், பல முஸ்லிம்களின் நிலைமை இன்று மகா மோசமாக இருப்பது வெளிப்படை. இது அறியாமைக்கால அறபுகள் இருந்த நிலைமைக்கு ஒப்பானது.

இந்தக் கோணத்தில் பார்த்தால், அன்று அந்த அறபுகளுக்கு எது மருந்தானதோ, அதுவே இவர்களுக்கும் மருந்தாகிறது. அவர்களைக் குணப்படுத்தியதே இவர்களையும் குணப்படுத்தும்.

---

3 பின்னிணைப்பு: தவ்ஹீது ஒரு விளக்கம் பக்கம்: 71

3

நபிமார்கள் செய்த அழைப்புப்பணி எப்படிப்பட்டது?

❀

முஸ்லிம்கள் மிகப் பெரிய அளவில் கவனம் செலுத்த வேண்டியது அகீதா (நம்பிக்கை) என்ற அம்சத்தின் மீதுதான் என்பதைச் சுட்டிக்காட்டவே இப்படி வகைப்படுத்துகிறேன். இங்கு நான் 'முஸ்லிம்கள்' என்று சொல்வது, குறிப்பாக அழைப்பாளர்களையே. அதிலும் அவர்களில் அறிஞர்களாக உள்ளவர்களைச் சொல்கிறேன்.

ஒரு வருத்தமான செய்தி. இன்று ஒவ்வொரு முஸ்லிமுக்கும் 'தாயீ' (இஸ்லாமிய அழைப்பாளர்) என்று பெயர் சொல்லப்படுகிறது. அவர்களோ மார்க்கக் கல்வியில் படுமோசமாக இருக்கிறார்கள். விளைவு? ஒவ்வொருவரும் தங்களை இஸ்லாமின் அழைப் பாளர்கள் என நம்பத் தொடங்குகிறார்கள்.

நாம் ஒரு விதியை எப்போதும் மனதில் நிறுத்த வேண்டும். அது அறிஞர்களிடம் மட்டுமல்லாது, நல்லறிவுகொண்டவர்களிடமும் பிரபலம். அது இதுதான்:

فَاقِدُ الشَّيْءِ لَا يُعْطِيْهِ

'ஒன்றைப் பெறாதவன், அதனைக் கொடுக்க முடியாது.'

உதாரணத்திற்கு, முஸ்லிம்களில் ஒரு பெரும் கூட்டத்தினரைச் சொல்லலாம். அவர்கள் மில்லியன் கணக்கில் இருப்பதை நாம் அறிவோம். 'இஸ்லாமிய அழைப்பாளர்கள்' என்றவுடனே அவர் கள்தாம் நினைவுக்கு வருவார்கள். ஆம், தப்லீக் ஜமாஅத்தையே சொல்கிறேன். இவர்களில் மிக அதிகமானவர்களின் நிலை,

وَلَكِنَّ أَكْثَرَ النَّاسِ لَا يَعْلَمُوْنَ

'மனிதர்களில் பெரும்பாலோர் அறியாதவர்களாகவே உள்ளனர்' (குர்ஆன் 7:187)

4

அந்தக் கால அறபிகளும்
இந்தக் கால முஸ்லிம்களும்

❀

சமுதாயம் கலிமாவை எப்படி மொழிகிறது?

கவனியுங்கள். 'லா இலாஹ இல்லல்லாஹ்'வைப் புரிந்துகொள்வதில் அன்றைய சிலை வணங்கிகளான அறபிகளுக்கும் இன்றைய முஸ்லிம் அறபிகளுக்கும் மத்தியில் மிகப் பெரிய வித்தியாசம் இருக்கிறது. அக்கால அறபிகளுக்கு அவர்களின் மொழியில் சொல்லப்படும் எதுவும் நன்கு புரிந்தது. ஆகவே 'லா இலாஹ இல்லல்லாஹ்' சொல்லுங்கள் என்றபோது அதையும் புரிந்து கொண்டார்கள். (அதனால் அதை ஏற்க மறுத்தார்கள்.)

இன்றோ இந்த முஸ்லிம் அறபிகளிடம் 'லா இலாஹ இல்லல்லாஹ்' சொல்லுங்கள் என்று அழைக்கவே தேவையில்லை. அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அதைப் புரிந்துகொள்ளா மலே சொல்லி வருகிறார்கள். காரணம், இவர்கள் எல்லாரும் அவர வரின் சிந்தனைகள், தத்துவங்கள், வழிமுறைகள், நம்பிக்கைகளுக்கு ஏற்ப 'லா இலாஹ இல்லல்லாஹ்'வுக்கு அர்த்தம் சொல்கிறார்கள். எனவே, மேன்மை மிக்க இந்த வாக்கியத்தின் சரியான அர்த்தத்தை இவர்களுக்கும் புரிய வைப்பது அவசியமாகிவிட்டது.

நபி ﷺ அவர்கள் யாரை அழைத்தார்களோ, அந்த ஆரம்பக் கால அறபிகளுக்கும் இன்று உள்ளவர்களுக்கும் இடையே இது ஓர் அடிப்படை வித்தியாசம். அந்த அறபிகளிடம் 'லா இலாஹ இல்லல்லாஹ்' சொல்லச் சொன்னால், உடனே ஆணவம் பிடித்தவர் களாக மாறிவிடுவார்கள். குர்ஆனில் இது தெளிவாக இருக்கிறது.

إِنَّهُمْ كَانُوا إِذَا قِيلَ لَهُمْ لَا إِلَٰهَ إِلَّا اللَّهُ يَسْتَكْبِرُونَ وَيَقُولُونَ أَئِنَّا لَتَارِكُو آلِهَتِنَا لِشَاعِرٍ مَجْنُونٍ

'அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை'

5

எது முஸ்லிம்களைப் பாதுகாக்கும்?

❀

முஸ்லிம்களுக்கு இந்தத் தூய கலிமாவைப் புரிய வைக்காமல், அவர்களை வழிகேட்டிலேயே வைத்துக்கொண்டு, ஒன்றுதிரட்டிக் கூட்டம் சேர்ப்பதனால் ஒரு பயனும் ஏற்படப்போவதில்லை; இது அவர்களுக்கு இவ்வுலகிலும் பயன் தராது; மறுமையிலும் பயன்படாது என இன்று நான் சொல்லிக்கொண்டிருப்பதின் காரணம் இதுதான்.

مَنْ شَهِدَ أَنْ لَّا إِلَهَ إِلاَّ اللهُ مُخْلِصًا مِّنْ قَلْبِهِ، أَوْ يَقِيْنًا مِّنْ قَلْبِهِ، لَمْ يَدْخُلِ النَّارَ، أَوْ دَخَلَ الْجَنَّةَ

‘ஒருவர் உள்ளத்தில் கலப்பற்றவராக, உறுதிகொண்டவராக லா இலாஹ இல்லல்லாஹ் என்று சாட்சி சொன்னால், அவர் நரகத்தில் நுழையவேமாட்டார்; அல்லது சொர்க்கம் செல்வார்’ என்று ஒரு நபிமொழி நமக்குத் தெரிவிக்கிறது. (அறிவிப்பு: ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் ﷺ, அஹ்மது 22060, அஸ்ஸஹீஹா 2355)

‘லாஇலாஹ இல்லல்லாஹ்’வை மனப்பூர்வமாக நம்பிக்கை கொண்டவருக்குச் சொர்க்கம் உறுதி! பாவங்களுக்காக நரகத்தில் வேதனை செய்யப்பட்டாலும், அவருடைய கடைசி தங்குமிடம் சொர்க்கமே.

ஆனால், ஒருவன் இத்தூய கலிமாவை நாவளவில் சொல்லிவிட்டு, உள்ளத்தில் அதன் மீதுநம்பிக்கை இல்லாதவனாக இருந்தால், அவனுக்கு அது மறுமையில் எந்தப் பலனையும் அளிக்காது. வேண்டுமானால் இவ்வுலக வாழ்க்கையில் முஸ்லிம்கள் ஆட்சி செய்யும் பகுதியில் (அந்தப் பகுதியைச் சேர்ந்தவன் என்ற முறையில் ஜிஸ்யா வரி செலுத்தினால்) அவனுக்குப் பாதுகாப்பு கிடைக்கலாம். அவனிடம் சண்டையிடப்படாது; அவன் கொல்லப்படமாட்டான்.

ஆனால், மறுமையில் எந்தப் பலனையும் அடையமாட்டான். அதற்கு அவன் முதலில் இக்கலிமாவைப் புரிந்து சொல்ல வேண்டும்;

6

அறிவது ஒன்றே ஈமான் ஆகிவிடுமா?

❀

லா இலாஹ இல்லல்லாஹ் அர்த்தத்தைப் புரிந்திருப்பது, அதை நம்பிக்கை கொண்டதற்கு அர்த்தமாகிவிடாது. இவ்வாக்கியத்தைச் சரியாகப் புரிவது, நம்பிக்கையும்கொள்வது ஆகிய இரண்டும் ஒன்று சேர்ந்தால்தான் ஒருவர் மூஃமின் (உண்மை விசுவாசி) ஆக முடியும்.

அதிகமான யூதர்களும் கிறித்துவர்களும் முஹம்மது ﷺ அவர்கள் உண்மைத் தூதர்தான் என்று அறிந்தே இருந்தார்கள். நபியவர்களுக்குத் தூதுச்செய்தி (வஹ்யி[8]) வருவதையும் அவருடைய நபித்துவத்தையும் தெரிந்திருந்தார்கள். அவர்களுக்கு அந்த அறிவு இருந்தது என்பதற்கு அல்லாஹ்வே சாட்சியமும் வழங்குகிறான்:

يَعْرِفُوْنَهُ كَمَا يَعْرِفُوْنَ أَبْنَاءَهُمْ

'அவர்கள் தங்கள் பிள்ளைகளை அறிவதுபோல் இவரை அறிவார்கள்..' (குர்ஆன் 2:146, 6:20)

ஆனாலும், அவர்களின் இந்த அறிவு அல்லாஹ்விடம் எந்த மதிப்பையும் அவர்களுக்குப் பெற்றுத் தரவில்லையே..ஏன்?

---

8 மொழி வழக்கில் வஹ்யி (وحي) என்றால் இரகசியமான தகவல் பரிமாற்றம், வெளிப்பாடு எனப் பொருள்படும். இஸ்லாமிய வழக்கில் இதன் பொருள், அல்லாஹ் தன்னுடைய தூதர்களில் ஒருவருக்கு தன் வார்த்தைகளை அறிவித்து வழிகாட்டும் முறை என்பதாகும். இமாம் இப்னுல் கய்யிம் ﵀ இதனை ஏழு வகைப்படுத்துகிறார்கள். 1. உண்மையான கனவு, 2. வானவர், நபி ﷺ அவர்களின் கண்முன் தோன்றாமல் உள்ளத்தில் செய்தியைப் போடுவது, 3. வானவர், ஓர் ஆண் உருவத்தில் தோன்றி நபியவர்களிடம் பேசுவது, 4. வானவர் மணியோசையைப் போன்று வருவது, 5. வானவர் தம் சுய உருவத்தில் தோன்றி செய்திகளை அறிவிப்பது, 6. நபியவர்களை அல்லாஹ் ஏழு வானங்களுக்கு மேல் அழைத்துப் பேசுவது, 7. வானவரின்றி நேரடியாக அல்லாஹ் பேசுவது. (ஸாதுல் மஆது, ப.78)

9

நாம் செய்யவேண்டியது தஸ்ஃபியா, தர்பியா

❀

அழைப்புப்பணியில் முதலாவதாக இப்பிரச்சினைமீது அதிகக் கவனம் செலுத்த வேண்டும்.

இரண்டாவதாக, 'தவ்ஹீதை எடுத்துச் சொல்வதுடன் மற்ற வேலையிலும் இறங்க வேண்டும், அதாவது அரசியல் பண்ண வேண்டும்' என்று சொல்லக் கூடாது. ஏனென்றால், முதலில் இஸ்லாமின் பக்கம் அழைப்பதே சத்திய அழைப்பு. நாம் அறபியர்கள் என்பதற்காக, 'நாங்கள் அறபியர்கள்; எங்கள் மொழியில்தான் குர்ஆன் இறங்கியுள்ளது' எனச் சொல்லிக்கொண்டு உண்மையைச் சீர்தூக்கிப் பார்க்காமல் இருக்கக் கூடாது.

இன்றைய அறபியர்கள் தங்கள் மொழி அறிவில் தூரமாக இருப்பதால் அறபியர் அல்லாதவர்களை விடப் படுமோசமாக இருக்கிறார்கள். அது அவர்களை குர்ஆன், நபிவழியிலிருந்து தூரமாக்கிவிட்டது. நாம் அறபியர்கள் என்ற முறையில் இஸ்லாமைச் சரியாகப் புரிவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அரசியலில் இறங்கி, மக்களையும் அதில் உழலச் செய்வது நமக்குக் கடமையல்ல. மாறாக, இஸ்லாமியக் கொள்கை, வணக்கங்கள், சமூக ஒழுக்கங்கள், நற்பண்புகள் இவற்றைமுறையாகக் கற்றுக்கொள்வதில் மக்களை ஈடுபடுத்த வேண்டும். (அறபி அல்லாதவர்களுக்கும் இது பொருந்தும்.)

சொல்லுங்கள், இப்படி இஸ்லாமியக் கொள்கை, வணக்கங்கள், ஒழுக்கங்கள், பண்பாடுகளை உண்மையாகப் புரிந்தவர்களும் அதன்படி வளர்ந்தவர்களும் மில்லியன் கணக்கிலா இருக்கிறார்கள்? இல்லவே இல்லை. நான் அப்படி நம்பவில்லை.

இந்தக் காரணத்திற்காகவே நாம் எப்போதும் இரண்டு அடிப்படை அம்சங்களைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். உண்மையான மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு அந்த இரண்டு அம்சங்கள்தான் உடனடி தேவை.

10

அரசியலில் யார் இறங்கலாம்? எப்போது?

❀

இன்று ஆக்ரமித்திருக்கும் அரசியல் நடவடிக்கைகள் நம்மைத் திசைதிருப்புவதற்காகவே உண்டாகியுள்ளவை. இதனால் நமது நேரம்தான் வீணாகிறது. இருப்பினும் நாம் அதைப் புறக்கணிக்க வில்லை. மார்க்க ரீதியாகவும் தர்க்க ரீதியாகவும் ஒரு வரிசைப்படி முறையாக அமைய வேண்டும் என்கிறோம். அதாவது,

- முதலில் கொள்கை,
- அடுத்து வணக்கங்கள்,
- அதற்கடுத்து நடத்தைகள்.

இவற்றைச் சரியாகப் புரிந்து தர்பியா பெற வேண்டும். பின்புதான் மார்க்கம் காட்டியுள்ள அரசியலில் நாம் இறங்க வேண்டிய நாள் நிச்சயம் வரும். அரசியல் என்றால் சமுதாயத்தின் காரியங்களை நிர்வகிப்பது என்று அர்த்தம். அப்படியானால் சமுதாயத்தின் காரியங்களை நிர்வகிக்க வேண்டியவர் யார்?

ஒரு கட்சியை நிறுவக்கூடிய, அல்லது ஓர் இயக்கத்துக்குத் தலைமை தாங்கக்கூடிய, அல்லது ஒரு ஜமாஅத்தை வழிநடத்தக் கூடிய ஜைதும், பக்ரும், அம்ரும் அல்ல. உண்மையில், சமுதாயத் தின் காரியங்களை நிர்வகிக்கும் பொறுப்பு, முஸ்லிம்கள் முன் னிலையில் உறுதிமொழி எடுத்துக்கொண்ட ஆட்சியாளருக்கு மட்டுமே. நடப்பு அரசியல் சூழ்நிலையை அறிந்திருக்க வேண்டிய கடமை அவருக்குத்தான். நிர்வாகத்தை நடத்தும் முழு பொறுப்பும் அவரையே சாரும்.

என்றாலும் இன்று முஸ்லிம்களிடம் ஒற்றுமை இல்லாத சூழ் நிலை நிலவுகிறது. இந்நேரத்தைப் பொறுத்த வரை, யார் இவர்கள் மீது ஆட்சி செய்கிறாரோ, அவர் தமது பொறுப்பை நிறைவேற்றத் தேவையான அறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்தக்

12

நமது பிரச்சினைகளின் வேர் எங்கே?

❀

வரலாற்றில் இல்லாத அளவிற்குச் சோகமான, கவலைக்கிடமான ஒரு காலகட்டத்தில் முஸ்லிம்களாகிய நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். காஃபிர்கள் நம்மீது பாய்வதற்குத் திரண்டுகொண்டிருக்கிற காலம் இது. பிரபலமான நபிமொழியில் சொல்லப்பட்டதைப் போலவே இருக்கிறது.

يُوْشِكُ الأُمَمُ أَنْ تَدَاعَى عَلَيْكُمْ كَمَا تَدَاعَى الأَكَلَةُ إِلَى قَصْعَتِهَا فَقَالَ قَائِلٌ وَمِنْ قِلَّةٍ نَحْنُ يَوْمَئِذٍ قَالَ بَلْ أَنْتُمْ يَوْمَئِذٍ كَثِيرٌ وَلَكِنَّكُمْ غُثَاءٌ كَغُثَاءِ السَّيْلِ وَلَيَنْزِعَنَّ اللهُ مِنْ صُدُوْرِ عَدُوِّكُمُ الْمَهَابَةَ مِنْكُمْ وَلَيَقْذِفَنَّ اللهُ فِي قُلُوْبِكُمُ الْوَهَنَ فَقَالَ قَائِلٌ يَا رَسُولَ اللهِ وَمَا الْوَهَنُ قَالَ حُبُّ الدُّنْيَا وَكَرَاهِيَةُ الْمَوْتِ

‘உணவு உண்பவர்கள் பந்திக்கு வருமாறு ஒருவரையொருவர் எவ்வாறு அழைக்கிறார்களோ, அவ்வாறே உங்களுடன் பகைமை கொண்ட சமுதாயம் உங்களை விழுங்கிவிட உங்களைச் சூழ்ந்து விடுவார்கள்’ என்றார்கள் நபி ﷺ அவர்கள்.

ஒரு மனிதர் கேட்டார், ‘அந்தக் காலகட்டத்தில் முஸ்லிம்களாகிய நாங்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையில் இருப்பதனால் அப்படி நடக்குமா?’

அதற்கு நபி ﷺ அவர்கள் பதில் சொன்னார்கள், ‘இல்லை! அந்தக் காலகட்டத்தில் நீங்கள் எண்ணிக்கையில் அதிகமாகத்தான் இருப்பீர்கள். ஆனால், வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படும் நுரை போன்று ஆகிவிடுவீர்கள். உங்கள் எதிரிகளின் உள்ளங்களிலிருந்து உங்களைப் பற்றிய அச்சம் எடுபட்டுப் போய்விடும். உங்கள் உள்ளங்களில் வஹ்ன் என்ற நோய் குடிகொண்டுவிடும்.’

உடனே ஒரு மனிதர் கேட்டார், ‘அல்லாஹ்வின் தூதரே! வஹ்ன் என்றால் என்ன?’

3

சீர்திருத்தப் பணிக்கு நபிமார்கள் காட்டிச் சென்ற வழிமுறை

❀

எந்தெந்த விசயங்களில் சீர்திருத்தம் வேண்டும் என்று பட்டிய லிட்டால், நம்பிக்கைகள், வணக்கங்கள், நடத்தைகள் இந்த மூன்றைத்தான் முதலில் சொல்ல முடியும். மூன்றுமே தவிர்க்க முடியாதவை. மிக முக்கியமானவை. எதையும் குறைத்து மதிப்பிட்டு அலட்சியம் செய்ய முடியாது. ஒவ்வொன்றிலும் கவனம் செலுத்தி சீர்திருத்தம் செய்ய வேண்டும். ஆனால் ஒரு விசயம்.

சீர்திருத்தத்தை எப்படித் தொடங்க வேண்டும்? முதலில் எந்த விசயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டால், அப் போது வணக்கங்களையோ, நடத்தைகளையோ சொல்ல முடி யாது. அகீதா சீர்திருத்தமே முதலாவதாக இருக்கும். அதாவது, ஈமான், நம்பிக்கை சம்பந்தப்பட்ட விசயங்களில் உண்டாகியுள்ள கேடுகளை, கிருமிகளை, குப்பைகளை அகற்றிச் சுத்தப்படுத்தும் சீர்திருத்தமே அனைத்திற்கும் ஆரம்பமாக இருக்க வேண்டும். ஏன் தெரியுமா?

நபிமார்கள் இப்படித்தான் சீர்திருத்தம் செய்தார்கள். அவர்களில் யாரும் எடுத்த எடுப்பிலேயே அமல்களின் சிறப்புகளையோ, சட்டதிட்டங்களையோ சொல்லிக் கொடுக்கவில்லை. தூய்மை, உணவு, உடை, சமுதாய ஒழுங்கு முறை, ஒழுக்கப்பண்பு, பொருளீட்டல், செலவு செய்தல், மணவாழ்க்கை, குடும்ப அலு வல்கள், சமூக பழக்கவழக்கங்கள், சமூக நடத்தைகள், வியாபாரக் கொடுக்கல் வாங்கல்கள், செல்வப் பங்கீடு, நாட்டு நிர்வாகம், அர சாங்க அமைப்பு என்று எந்தவிதமான சிறிய, பெரிய பிரச்சினை களுக்கும் இஸ்லாமில் தீர்வு உண்டு என்றாலும், இந்தப் பிரச்சினை களைத் தலையாயப் பிரச்சினைகளாக அவர்கள் பார்க்கவில்லை.

4

தப்லீக் ஜமாஅத் அடிப்படைக் கொள்கையும் செயல்பாடுகளும்

❀

1927இல் மவ்லானா முஹம்மது இல்யாஸ் அவர்கள் தப்லீக் இயக்கத்தைத் தொடங்கினார்கள். அப்போது அவர்களின் வயது 42. தப்லீகின் தலைமையகம் உள்ள டில்லி நிஸாமுத்தீன் பங்ளாவாலி மஸ்ஜிதிற்கு அருகிலேயே அவர்களது இருப்பிடம். மஸ்ஜிது அமைந்திருக்கும் இடம் அக்காலத்தில் ஒரு காட்டுப்பிரதேசம். அங்கு விறகு வெட்டி எடுத்துப் போவதற்காக மேவாத்தைச் சேர்ந்த கூலித்தொழிலாளிகள் வருவதுண்டு. மேவாத் என்பது டில்லியின் எல்லைப் புறத்தை ஒட்டிய பல கிராமங்களின் பகுதி.

பெயரளவில் முஸ்லிம்களாக இருந்த இப்பகுதி மக்களை மஸ்ஜிதுக்கு அழைத்து வந்து, அவர்களுக்கும் அவர்களது குழந்தைகளுக்கும் தொழுகையைச் சொல்லித் தருவதிலிருந்தே தப்லீக் இயக்கம் முதல் முறையாகத் தொடங்கியது. பிறகு, கொஞ்சம் கொஞ்சமாக இப்பணியில் ஈடுபடுகிறவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க, இயக்கம் விரிவடைந்தது.

1944 ஜூலையில் தம் 59ஆம் வயதில் மவ்லானா இல்யாஸ் மரணித்தார்கள். அடுத்து, அவர்களின் மகன் மவ்லானா முஹம்மது யூசுஃப் அவர்கள் தலைமைப் பொறுப்புக்கு வந்தார்கள். அவர்களும் 1965 ஏப்ரலில் மரணித்த பின், மவ்லானா முஹம்மது இன்ஆமுல் ஹஸன் தலைமை தாங்கினார்கள். ஹஜ்ரத்ஜீ என்று பிரபலமான இவர்கள், சுமார் மூப்பது வருடங்களுக்குப் பின் 1995 ஜூனில் மரணித்தார்கள். இதற்குப் பின் தலைமைப் பொறுப்பு மவ்லானா இஸ்ஹாருல் ஹஸன், சுபைருல் ஹஸன், முஹம்மது சஅது எனும் மூவர்கொண்ட குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது.

— நம்மைப் பொறுத்தவரை இந்த ஜமாஅத்தில் பங்களிப்போர் குறித்த ஒரே கவலை, இம்மக்கள் அஹ்லுஸ் ஸுன்னத் வல்ஜமாஅத்